
FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

## 2023 பெப்ரவரி

Vol. 03 - தொகுதி 02


சத்தியாகிரகம் மீது போலீசார் தாக்குதல்


வசந்தாவின் விடுதலைக்கு எதிராக மேன்முறையீடு


கண்ணீர்ப்புகை தாக்குதலில் போராட்டக்காரர் பலி

ஊடக சுதந்திரம் குறித்து பெப்ரவரி மாதத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் மற்றும் கடந்தகால சம்பவங்களின் வளர்ச்சிப்போக்குகள் மற்றும் அந்தச் சம்பவங்கள் தொடர்பான அவதானிப்புகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் புதிய சட்ட உருவாக்கம், சட்டச் சீர்திருத்தங்கள், சட்டத் திருத்த முன்மொழிவுகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச கருத்துகள் போன்றவற்றிலும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதி கூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 14 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் பெப்ரவரி 2023 அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான 04 சம்பவங்கள், சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 09 சம்பவங்கள், தொழில்சார் நிபுணத்துவம் தொடர்பான ஒரு சம்பவம் என மொத்தம் 14 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் இங்கு அவதானிக்கப்பட்டுள்ளன.

## பெப்ரவரி மாதத்தில் கண்காணிக்கப்பட்ட சம்பவங்கள்:

1. தேசிய சுதந்திர தின விழா நடைபெறும் வளாகத்திற்குள் பெயரிடப்பட்ட செயற்பாட்டாளர்கள் சிலர் நுழைவதை தடை செய்யும் முகமாக நீதிமன்ற உத்தரவு பிரபிக்கப்பட்டமை.
2. எல்பின்ஸ்டன் திரையரங்கம் அருகே நடைபெற்ற சுதந்திரத்திற்கான சத்தியாகிரகத்தில் ஈடுபட்டவர்களின் மீது போலீசார் தாக்குதல் நடத்தியதுடன் குறித்த சத்தியாக்கிரகத்தை கலைத்தமை.
3. சுதந்திர சதுக்கத்தில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தப்பட்ட நான்கு செயற்பாட்டாளர்களுக்கு பிணை வழங்கியமை.
4. அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேயின் விடுதலைக்கு எதிராகக் காவல்துறையினர் மேன்முறையீடு செய்யத் தீர்மானம் மேற்கொண்டமை.
5. களனி பல்கலைக்கழக மாணவர் தலைவர்களுக்கு எதிராகப் பொலிஸார் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவையெனப் பல்கலைக்கழக நிருவாகம் நீதிமன்றத்திற்கு அறிவித்தமை.
6. ஜனாதிபதியின் யாழ்ப்பாண விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பா.உ. கஜேந்திரன் உள்ளிட்ட 18 பேர் கைது செய்யப்பட்டமை.
7. கொவிட்-19 காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் குறித்து ஆய்வுக்

கட்டுரை தொகுப்பதற்காக ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டமை.

8. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதை தடுக்கும் வகையில் பொலிஸார் தன்னை திட்டமிட்டு பழிவாங்குவதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத் தலைவி மரியசுரேஸ் ஈஸ்வரி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையீடு.

9. செய்தி இணையதளங்களை பதிவு செய்வது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரையொன்றை மேற்கொண்டமை.

10. ஐக்கிய மக்கள் சக்தி கட்சியால் மேற்கொள்ளப்பட இருந்த போராட்டத்திற்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிரப்பித்தமை.

11. கல்வி அமைச்சுக்குள் பலவந்தமாக நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மாணவர் பிக்குகள் உட்பட 62 பல்கலைக்கழக மாணவர்கள் சிறையில் அடைக்கப்பட்டமை.

12. கல்வி அமைச்சு வளாகத்திற்குள் மாணவர்கள் மீது பொலிஸார் தாக்கியதை காணொளி எடுத்த இரு ஆசிரியர் சங்க செயற்பாட்டாளர்களை கைது செய்தமை சம்பவம்.

13. பா.உ அனுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட 26 பேருக்குக் கொழும்பின் பல பகுதிகளுக்குள் நுழையத் தடை விதித்து நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை.

14. போராட்டத்தைக் கலைக்க போலீசார் நடத்திய கண்ணீர் புகைக்குண்டு தாக்குதலில் போராட்டக்காரர் ஒருவர் உயிரிழந்தமை.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை – 2023 பெப்ரவரி மாதம்**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கக் கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 04 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 09 |
| தொழில்சார் நிபுணத்துவம் | 01 |
| **மொத்தம்** | **14** |

## பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல் மற்றும் மனதை ஒர்முகப்படுத்தி சுயாதீனமாகத் தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயாதீன சூழலை உருவாக்குதல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளிலிருந்து எதிர்விளைவுகளுக்கு உள்ளாகாமல் அல்லது தனது பாதுகாப்பிற்கு எவ்வித பாதிப்புக்களையும் எதிர்கொள்ளாமல் சுதந்திரமாகத் தனது கருத்தை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாகும். இவ்வடிப்படை உரிமைகள் மீறப்பட்ட 04 சம்பவங்கள் பெப்ரவரி மாதத்தில் அவதானிக்கப்பட்டன. போராட்டத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணீர்ப்புகை தாக்குதல் காரணமாக ஒருவர் உயிரிழந்தடுடன் இன்னொருவர் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றமை இச்சம்பவங்களில் பாரதூரமான சம்பவமாகக் கருதப்படுகின்றது.**

**அட்டவணை 2 : 2023 பெப்ரவரி மாதம் : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – சம்பவங்கள் 04**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| உயிரிழப்பு / கொலை | 01 |
| தாக்குதல் | 01 |
| உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் | 02 |
| **மொத்தம்** | **04** |

01. **எல்பின்ஸ்டன் திரையரங்கம் அருகே நடைபெற்ற சுதந்திரத்திற்கான சத்தியாகிரகத்தில் ஈடுபட்டவர்களின் மீது போலீசார் தாக்குதல் நடத்தியதுடன் குறித்த சத்தியாக்கிரகத்தை கலைத்தமை.**

சுதந்திர தின விழா நடத்துவதை எதிர்த்துச் சிவில் ஆர்வலர்கள் குழுவால் பெப்ரவரி 3 ஆம் திகதி இந்தச் சத்தியாகிரகம் ஆரம்பிக்கப்பட்டது. அன்றிரவு, ஒரு கும்பல் உள்ளே நுழைந்து அதைச் சீர்குலைக்க முயன்றதை அடுத்து, அமைதியான

முறையில் நடைப்பெற்றுக் கொண்டிருந்த சத்தியாக்கிரக கூட்டத்தில் கலந்துகொண்ட நபர்கள்மீது போலீசார் தாக்குதல் மேற்கொண்டதுடன் கண்ணீர் புகை மற்றும் தண்ணீர் தாரகை பிரயோகித்து சத்தியாக்கிரகத்தை கலைக்க நடவடிக்கை மேற்கொண்டனர். காவல்துறையின் இந்தச் செயலுக்கு வழக்கறிஞர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. மேலும், செயல்பாட்டாளர்கள் 4 பேரைப் போலீசார் கைது செய்தனர்.

ஆதாரம்: www.youtube.com

02. **ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதை தடுக்கும் வகையில் பொலிஸார் தன்னை திட்டமிட்டு பழிவாங்குவதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத் தலைவி மரியசுரேஸ் ஈஸ்வரி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையீடு.**

போராட்டங்களில் கலந்து கொள்ள வேண்டாம் என்று காவல்துறை தனக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருவதாகவும், இலங்கையினுடைய 75 வது சுதந்திர தினத்தைக் கறுப்பு நாளாகத் தெரிவித்து தமிழ் இனத்தின் மீதான அடக்குமுறையை நிறுத்தக் கோரி யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்த வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி என்ற போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த சமயத்தில் தனது மகனைப் பொய்யான குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யக் காவல்துறை சதி செய்ததாகவும் அவர் குறிபிட்டுள்ளார். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச மனித உரிமைப் பாதுகாவலர்களிடம் தனது பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆதாரம்: www.youtube.com

03. **கல்வி அமைச்சு வளாகத்திற்குள் மாணவர்கள் மீது பொலிஸார் தாக்கியதை காணொளி எடுத்த இரு ஆசிரியர் சங்க செயற்பாட்டாளர்களை கைது செய்தமை சம்பவம்.**

பெப்ரவரி 23 ஆம் திகதி, பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழக மாணவர் பிக்குகள் அடங்கிய நபர் குழுவொன்று பத்தரமுல்ல கல்வி அமைச்சு அமைந்துள்ள வளாகத்தில் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டிருந்தபோது, பொலிசார் அவர்களை அடித்து விரட்டியதை ஒளிப்பதிவு செய்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்தச் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

செயற்பாட்டாளர்களான சமித் ஹர்ஷனத் மற்றும் நாலக டி சில்வா ஆகியோர் கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் அன்றைய தினம் பணி இடம்மாறுதல் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டபோது இந்த நிலைமையை எதிர்கொண்டனர். அவர்கள் தலங்கம காவல்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்குப் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

ஆதாரம்: vivaranews.com

04. **போராட்டத்தைக் கலைக்க போலீசார் நடத்திய கண்ணீர் புகைக்குண்டு தாக்குதலில் போராட்டக்காரர் ஒருவர் உயிரிழந்தமை.**

பெப்ரவரி 26 ஆம் திகதி தேசிய மக்கள் சக்தி கட்சியினால் நடத்தப்பட்ட அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸாரின் கண்ணீர் புகைக்குண்டு தாக்குதலுக்கு இலக்காகி கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிவித்திகல பிரதேசத்தைச் சேர்ந்த நிமல் அமரசிறி (61) உயிரிழந்தார்.

தாக்குதலுக்கு உள்ளான கெஸ்பேவ பகுதியைச் சேர்ந்த அஜித் கமகே (வயது 46) என்பவர் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதுடன், மேலும் பொலிஸாரின் தாக்குதல்களில் 28 பேர் காயமடைந்துள்ளனர்.

ஆதாரம்: lankatruth.com

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள்

**ஜனவரி மாதத்தில் ஊடக சுதந்திரம் தொடர்பான சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் என்ற ஆக்கக் கூறுக்குள் உள்ளடங்கும் 09 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன. பேச்சு சுதந்திரத்துக்கும், கருத்துச் சுதந்திரத்துக்கும் எதிரான காவல்துறையின் தொடர் நடவடிக்கை இம்மாதத்தில் அவதானிக்கப்பட்ட தனித்துவமான விடயமாகும் ஆகும். அனைத்து வகையான போராட்டங்களுக்கும் எதிராக நீதிமன்றத்தை நாடிய காவல்துறையின் போக்கு கடந்த சில மாதங்களாக அவதானிக்கப்பட்டதுடன் பெப்ரவரி மாதத்திலும் அது போன்ற சம்பவங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. பெப்ரவரி மாத அறிக்கையில் உள்ளடங்கிய சம்பவங்களில், 86 போராட்டக்காரர்களைப் போலீசார் கைது செய்ததுடன் அவர்களில் 84 பேர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களில் 62 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதுடன் 22 பேருக்குப் பிணை வழுங்கப்பட்டது.**

**அட்டவணை 03 – 2023 பெப்ரவரி: சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் – 09 சம்பவங்கள்**

| **குறிகாட்டி** | **அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 09 |
| **மொத்தம்** | **09** |

01. **தேசிய சுதந்திர தின விழா நடைபெறும் வளாகத்திற்குள் பெயரிடப்பட்ட செயற்பாட்டாளர்கள் சிலர் நுழைவதை தடை செய்யும் முகமாக நீதிமன்ற உத்தரவு பிரபிக்கப்பட்டமை.**

பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றினால் கோட்டை பொலிஸாரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், அருட்தந்தை ஜீவந்த பீரிஸ், சட்டத்தரணி நுவன் போபகே உள்ளிட்ட 29 பேருக்குப் பெப்ரவரி 04 திகதி தேசிய சுதந்திர தின நிகழ்வு நடைபெறும் காலிமுகத்திடல் மைதானம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பல வீதிகளுக்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: www.youtube.com

02. **சுதந்திர சதுக்கத்தில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தப்பட்ட நான்கு செயற்பாட்டாளர்களுக்கு பிணை வழங்கியமை.**

தேசிய பொதுவழிகள் சட்டத்தை மீறிச் சட்டவிரோதமான முறையில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டமை மற்றும் பொதுமக்கள்மீது இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் சமூக ஊடக செயற்பாட்டாளர் பிரியத் நிகேஷல உள்ளிட்ட நால்வருக்கு எதிராக மருதானை பொலிஸார் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்திருந்தனர். தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் அவர்களை விடுவிக்குமாறு நீதவான் மேலும் உத்தரவிட்டார். சத்தியாக்கிரகத்தைத் தாக்க வந்த மூன்று நபர்களுக்கு எதிராக, "கலகத்தனமான நடத்தை" உள்ளிட்ட பிற குற்றச்சாட்டுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்த இன்னொரு வழக்கின் பிரதிவாதிகளாக மேற்கண்ட செயல்பாட்டாளர்களின் மூன்று பேரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவர்கள் அந்தக் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

ஆதாரம்: divaina.lk

03. **அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேயின் விடுதலைக்கு எதிராகக் காவல்துறையினர் மேன்முறையீடு செய்யப் தீர்மானம் மேற்கொண்டமை.**

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த வசந்த முதலிகே என்பவரை விடுதலை செய்யக் கொழும்பு பிரதான நீதவான் கடந்த ஜனவரி 31ஆம் திகதி வழங்கிய தீர்ப்புக்கு எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றில் இந்த மேன்முறையீடு தாக்கல் செய்யப்படவுள்ளது. அதற்கான கோரிக்கை சட்டமா அதிபரிடம் விடுக்கப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பெப்ரவரி 02 ஆம் திகதி அறிவித்தார்.

ஆதாரம்: www.aruna.lk

04. **களனி பல்கலைக்கழக மாணவர் தலைவர்களுக்கு எதிராகப் பொலிஸார் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவையெனப் பல்கலைக்கழக நிருவாகம் நீதிமன்றத்திற்கு அறிவித்தமை.**

மாணவர் செயற்பாட்டாளர்களான கெலும் முதன்நாயக்க மற்றும் டில்ஷான் ஹர்ஷன ஆகியோருக்கு எதிராகப் பொலிஸார் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவையென மாணவர்களின் சட்டத்தரணிகள் ஊடாகப் பல்கலைக்கழக நிர்வாகம் நீதிமன்றில் அறிவித்துள்ளது. இந்தக் குற்றச்சாட்டின் பேரில், அவர்கள் ஜனவரி மாதம் முதல் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், பெப்ரவரி 13ஆம் திகதி மஹர நீதவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, சட்டத்தரணிகள் இந்த உண்மையை நீதிமன்றத்திற்குத் தெரிவித்தனர். அவர்களைப் பெப்ரவரி 20ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

ஆதாரம்: mawbima.lk

05. **ஜனாதிபதியின் யாழ்ப்பாண விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பா.உ. கஜேந்திரன் உள்ளிட்ட 18 பேர் கைது செய்யப்பட்டமை.**

கடந்த பெப்ரவரி 11ஆம் திகதி யாழ்.பேருந்து நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட அமைப்பாளர் தீபன் திலீஷன் உட்பட 18 பேர் கைது செய்யப்பட்டனர். உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் பிரவேசித்து நீதிமன்ற உத்தரவை மீறிய குற்றச்சாட்டின் பேரில் அன்றிரவு யாழ்ப்பாணம் பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், அவர்கள் தலா ரூபா 3 லட்சம் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆதாரம்: www.adaderana.lk

06. **செய்தி இணையதளங்களை பதிவு செய்வது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரையொன்றை மேற்கொண்டமை.**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, செய்தி இணையத்தளங்களைப் பதிவு செய்வது தொடர்பில் மிகவும் வெளிப்படையான மற்றும் சட்ட அமைப்பைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு ஊடக அமைச்சுக்கு பரிந்துரை செய்துள்ளது.

medialk.com என்ற இணையத்தளத்தைப் பதிவு செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கோரியபோது அனுமதி கிடைக்கவில்லையென ஊடக அமைச்சுக்கு எதிராக அதன் பிரதம ஆசிரியர் தரிந்து ஜயவர்தனவினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டினை விசாரித்த மனித உரிமைகள் ஆணைக்குழு இந்தப் பரிந்துரைகளைச் மேற்கொண்டுள்ளது.

ஆதாரம்: theleader.lk

07. **ஐக்கிய மக்கள் சக்தி கட்சியால் மேற்கொள்ளப்பட இருந்த போராட்டத்திற்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிரப்பித்தமை.**

பெப்ரவரி 20 ஆம் திகதி கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பில் கோட்டை பொலிஸாரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய கோட்டை நீதவானால் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி, பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள 7 பேர் மற்றும் அவர்களுடன் வருபவர்கள் ஜனாதிபதி அலுவலகம், ஜனாதிபதி மாளிகை, நிதியமைச்சு மற்றும் காலிமுகத்திடல் மைதான வளாகத்திற்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: colombotimes.lk

08. **கல்வி அமைச்சுக்குள் பலவந்தமாக நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மாணவர் பிக்குகள் உட்பட 62 பல்கலைக்கழக மாணவர்கள் சிறையில் அடைக்கப்பட்டமை.**

கடந்த பெப்ரவரி 23ஆம் திகதி பத்தரமுல்லையில் கல்வி அமைச்சில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்ட அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உட்பட 62 பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் 53 மாணவர் பிக்குகள் கடுவெல நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு பெப்ரவரி 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கல்வி அமைச்சுக்குள் வலுக்கட்டாயமாகப் பிரவேசித்தல், பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், கடமைகளைச் செய்து கொண்டிருந்த அதிகாரிகளுக்கு இடையூறு விளைவித்தல், பொதுமக்களை அச்சுறுத்தல் மற்றும் சதி செய்தல் ஆகிய குற்றச்சாட்டுக்களுக்கு எதிராகத் தலங்கம பொலிஸார் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

ஆதாரம்: www.colomboxnews.com

09. **பா.உ அனுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட 26 பேருக்குக் கொழும்பின் பல பகுதிகளுக்குள் நுழையத் தடை விதித்து நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை.**

தேர்தலை நடத்தாமை, மின் கட்டணம் மற்றும் வரி அதிகரிப்பு போன்றவைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 26 ஆம் திகதி தேசிய மக்கள் சக்தி கட்சி கொழும்பில் நடத்திய போராட்டத்தின் அடிப்படையில் கோட்டை, கொம்பனித்தெரு மற்றும் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளின் கோரிக்கைக்கு அமைய கோட்டை நீதவானால் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

26ஆம் திகதி பிற்பகல் 1 மணி முதல் இரவு 8 மணிவரை ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், காலிமுகத்திடல் உள்ளிட்ட கொழும்பின் பல பகுதிகளுக்குள் பெயரிடப்பட்ட குழுவினர் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: news19.lk

## தொழில்சார் நிபுணத்துவம்

**'தொழில்சார் நிபுணத்துவம்' என்பது ஊடக சுதந்திரம் தொடர்பாகக் கவனிக்கப்படும் ஒரு முக்கிய காரணியாகும். சிறந்த கல்வியை பெற்ற பத்திரிகையாளர்கள், பத்திரிகையாளர்களின் பணி நிலைமைகள், பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர் குழுவிற்கான சர்வதேச வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துதல், சுய-தணிக்கை, தொழிற்சங்கங்கள் மற்றும் அமைப்புக்கள் மூலம் பத்திரிகையாளர்களின் நிபுணத்துவ சுயாட்சி உறுதிப்படுத்தப்படல் மற்றும் பத்திரிகையாளரின் பங்குபற்றிய புரிதல், ஊடக தொழிலுக்கான அங்கீகாரம் போன்ற குறிகாட்டிகள் தொழில்சார் நிபுணத்துவம் என்ற ஆக்கக் கூறை பிரதிநிதிப்படுத்துகின்றது. இந்தக் குறிகாட்டியின் கீழ் ஒரு சம்பவம் பெப்ரவரி மாதத்தில் பதிவாகியுள்ளது.**

**அட்டவணை 04 – 2023 பெப்ரவரி : தொழில்சார் நிபுணத்துவம் – 01 சம்பவம்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பத்திரிகையாளரின் கல்வி மற்றும் தேர்ச்சி | 01 |
| **மொத்தம்** | **01** |

01. **கொவிட்-19 காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் குறித்து ஆய்வுக் கட்டுரை தொகுப்பதற்காக ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டமை.**

சுதந்திர ஊடக இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட இந்தச் செயலமர்வில் குறித்த விடயப்பரப்பு தொடர்பான புலனாய்வு கட்டுரை தொகுப்பதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் குழுவிற்கான இந்தச் செயலமர்வு இலங்கை பத்திரிகை ஸ்தாபன கேட்போர் கூடத்தில் பெப்ரவரி 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடைப்பெற்றது.

ஆதாரம்: www.facebook.com

**அட்டவணை 5 : ஊடக சுதந்திரம் : 2023 ஜனவரி முதல் பெப்ரவரி வரையான காலப்பகுதிக்குள் சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் | 2023 ஜனவரி | | 2023 பெப்ரவரி |
|---|---|---|---|
| | புதிய சம்பவங்கள் | முன்னைய சம்பவங்களின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | - | - | 04 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 11 | 01 | 09 |
| ஊடக சுயாதீனத்துவம் | - | - | - |
| தொழில்சார் நிபுணத்துவம் | - | - | 01 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 03 | - | - |
| **மொத்தம்** | **14** | **01** | **14** |

2022 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாக காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


Free Media Movement

Convener: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620 | Secretary: Hana Ibrahim +94 77 741 2995
Treasurer: Ananda Jayasekara +94 77 312 4850
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com | Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka | #FMM25


Layout: Nalinda Seneviratne